DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.770/2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திரு. கபில் தேவ் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி ஆய்வாளர், ஏரல் காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 22-06-2026.(நேரம்: 12.55PM )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது ஏரல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்கிறேன். இந்த வழக்கினை வழக்கினை விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திரு. பாலு இறந்துவிட்டபடியால் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 12.10.2020 ம் தேதி ஏரல் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலர் திரு.பிரேம் குமார் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது நிலைய குற்ற எண் 460/20 பிரிவுகள் இதச 294(பி), 324 ஆக பதிவு செய்த வழக்கை விசாரணைக்கு வேண்டி விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் திரு.பாலு அவர்களிடம் ஒப்படைத்தார்.

விசாரணை நகலை விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்ததை அவர் 12.10.2020ம் தேதி இரவு 21.30 மணிக்கு சாட்சிகள் பிச்சம்மாள் மற்றும் சூர்யா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்திலிருந்து 19 செ.மீ அளவுள்ள அருவாள்மனை ஒன்று கைப்பற்றி உதவி ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்துள்ளார். **அந்த அத்தாட்சி அசாஆ 6 ஆக குறியீடு செய்யபப்படுகிறது.**

பின்பு சாட்சிகள் சண்முகநாதன், பிச்சம்மாள், சூர்யா, ஐயாதுரை,சந்திரா , முப்பிடாதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை இரண்டாம் நிலை காவலர் திரு. பிரேம் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் 27.10.2020 ம் தேதி 15.00 மணிக்கு ஏரல் காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து தக்க ஜாமின்தார்கள் உடன் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றிய வழக்கு சொத்து பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்ததிற்கு அனுப்பி பிஆர்எண் 390/20 பெற்றுள்ளார். **அந்த படிவம் 91 அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இவ்வழக்கில் காயம்பட்ட நபர்க்கு சிகிட்சை அளித்த தூத்துக்குடி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திருமதி சூர்ய பிரதிபா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். மருத்துவர் அளித்த **காயச்சான்று அ.சா.ஆ 8 ஆகும். (குவிமுச 294(3) ன் படி)**

இத்துடன் தனது விசாரணையை முடித்து 23.11.2020 ஆம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி),324 ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் அனுப்பியுள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வழக்கின் உள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

வழக்கானது புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.